# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 60 பிரசோற்பத்தி தை 12 (26 01 1992) ஞாயிறு


26·01·1992

சென்னையில் சிறுநீரகச் சந்தை

## சிறுநீரகம் பொருத்தும்போது இருவர் மரணம்

சிறு நீரகக் கோளாறினால் அவதியுற்ற நோயாளிக்கு வேறொருவருடைய சிறு நீரகத்தை அகற்றி நோயாளிக்கு பொருத்தியபோது சிறு நீரகத்தைக் கொடுத்தவரும் அதைப் பெற்றவரும் மரணமான சம்பவம் சென்னையில் நிகழ்ந்துள்ளது.

இம் மரணத்துக்குக் காரணம் சத்திர சிகிச்சை நிபுணரின் கவலையீனம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விடயம் பற்றி விசாரணை செய்த பொலிஸார் உடல் உறுப்புக்கள் வியாபாரச் சந்தை ஒன்று தமிழ் நாட்

— 06 ஆம் பக்கம் பார்க்க

# மட்டக்களப்பில் ஒரு வாரத்தில்

# படையினர் தாக்கு 10 தமிழர் பலி

## 20 பேர் முகாமில் தடுத்துவைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக படையினர் பதுங்கியிருந்து தமிழர்களைத்தாக்கி வருவதாகவும் இதில் 10 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் சுமார் 20 பேர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கடந்த 21ஆம் திகதி காஞ்சிரங்குடா என்ற இடத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் 4 பேர் பலியானார்கள்.

22ஆம் திகதி முறக்கொட்டான்சேனை பகுதியில் பதுங்கியிருந்த இராணுவம் தாக்கி மூன்று தமிழர்கள் உயிரிழந்தனர்.

இவர்களின் சடலங்களை உறவினர் எடுக்கச் சென்றபோது முகாமில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சித்தாண்டியிலும் பதுங்கியிருந்து தாக்கியதில் மூன்று தமிழர் படுகாயமடைந்தனர்.

அரசடித்தீவில் பதுங்கியிருந்த வீதியால் வந்த மூன்று தமிழ் இளைஞர்களை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறாக 10 தமிழர் மரணமானதாகவும் 20 பேர் கைதானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவின் முதலாவது ஏவுகணைப் படகு

இந்தியாவின் முதலாவது ஏவுகணை அதிவேகப்படகு நேற்று கோவாவில் உள்ள வாஸ்கோ துறைமுகத்தில் இருந்து செலுத்தப்பட்டது.

இப்படகு இவ்வாண்டு இறுதியில் இந்திய கடற்படையுடன் சேரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நெடுந்தீவில் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டுமாம்

நெடுந்தீவில் அரச ஊழியர்களாகக் கடமையாற்றுபவர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்குச் செல்ல வேண்டுமானால் அங்கு சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சென்றவாரம் அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

நெடுந்தீவில் தங்கியிருக்கும் மாற்றுக் குழுவினரின் நடவடிக்கைகள் ஏதும் வெளியிட வேண்டாம் என்பதே அந்த சத்திய பிரமாணத்தின் நோக்கமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## நீரில் மூழ்கி குழந்தை மரணம்

யாழ் பாணம் மடம் வீதியிலிருந்த குளத்துக்குக் குளிக்கச் சென்ற தாய் தன் 3 வயதுக் குழந்தையை இழந்தார்.

குளக்கரையில் குழந்தையை இருத்திவிட்டு உடுபுடவைகளை கழுவிக் கொண்டிருந்த பிரஸ்தாப குழந்தையின் தாய் தற்செயலாகத் திரும்பிப் பார்த்த

—06ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணம் வழங்கும்போது கண்காணிப்புக் குழு

மட்டக்களப்புப் பகுதியில் நிவாரணம் வழங்கும்போது கூட்டுறவுச் சங்கங்களில் கண்காணிப்புக்குழுக்கள் பார்வையிடவுள்ளன.

சரியான முறையில் மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதில்லை என வந்த புகார்களையடுத்தே இந்த முறை அமுல்படுத்தப்படுகிறது.

## ஒற்றுமை யாத்திரையால் ஸ்ரீநகரில் பதட்டம்

இன்று ஸ்ரீநகரில் நடைபெறவுள்ள இந்தியக் குடியரசு தின நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் ஸ்ரீநகருக்கு விமானத்தில் அழைத்துச் செல்லப்படவிருப்பதாக வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து ஸ்ரீநகரில் மேலும் பதட்டம் அதிகரித்திருப்பதாக அறியமுடிகிறது

—06 ஆம் பக்கம் பார்க்க

## செட்டியா குறிச்சியில் ஆலயம் வீடுகள் சேதம்

பூநகரி செட்டியா குறிச்சிப் பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் அங்குள்ள தமிழ்க் கலவன் பாடசாலை, திகிரி பிள்ளையார் ஆலயம் ஐயர் தங்கும் மடப்பள்ளி, பூநகரிசங்கத்திற்குச் சொந்தமான செட்டியா குறிச்சி சங்கக்கடைக் கிளை ஆகியன படையினரால் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

திகிரிப்பிள்ளையார் ஆலய மடப்பள்ளியும், முன்பாக உள்ள மண்டபமும் படையி

— 06 ஆம்பக்கம் பார்க்க

## சீனன்குடா குண்டுவெடிப்பு அரசு மூடிமறைக்கிறதாம்

சீனன்குடா விமானத்தளக் குண்டு வெடிப்பு சம்பவத்தின் காரணம், சேதவிபரங்களை அரசு வெளியிட வேண்டும் என சில எதிர்க்கட்சியினர் கேட்டுள்ளனர்.

அரசு இச்சம்பவத்தை மூடி மறைக்கப்பார்க்கிறது எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## அமெரிக்கா இஸ்ரேலுக்கு நிதி வழங்குகிறது

அமெரிக்கா இஸ்ரேலுக்கு 10 ஆயிரம் மில்லியன் டொலர் கடனுக்கு உத்தரவாதம் வழங்கியிருக்கிறது, ஆனால் இந்தப் பணம் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் புதிதாக யூதக் குடியேற்றங்கள் செய்வதற்கு பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனை விதித்திருக்கிறது

எனினும் இப்பிரதேசங்களில் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களைப் பூர்த்திசெய்ய இப்பணத்தை உபயோகிக்கலாம் என இராஜாங்கத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க உதவியுடன்

## கோப்பாய்ப் பகுதி மாணவருக்கு இரவு நேரம் மின் விளக்குகள்

40 மின்விளக்குகள் கொண்ட ஜெனரேட்டர் கோப்பாய் பகுதி மாணவர்களின் நலன்கருதி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையால் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கோப்பாய்ப்பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையும். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் வைத்து இது பயன்படுத்தப்படும்.

நாற்பது வகுப்புக்கள் நேற்று மின் வெளிச்சத்தில் நடைபெற்றன.

யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் இதனைச் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைத்தார்.

மாணவர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது கல்வியை வளர்க்க வேண்டும் என அவர் இங்கு உரையாற்

—06 ஆம் பக்கம் பார்க்க

கடன் அதிகாரிகள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

## பதுளை இலங்கை வங்கியில்

# உருளைக்கிழங்குக் கடனில் ஒரு கோடி ரூபா மோசடி!

பதுளை இலங்கை வங்கியில் ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை தற்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கு கடன் வழங்குவதற்கென குறிப்பிட்ட தொகைப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த உருளைக்கிழங்குக் கடன் வழங்கலிலேயே ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை மோசடி செய்யப்பட்டுள்ளமை வங்கியின் உள்ளக கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

தற்பொழுது இந்த விடயம் இரகசியப் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வங்கிக் கடன் அதிகாரிகள் பொலிஸாரினால் விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர்.

மெள்ள மெள்ள வெளியாகும் உண்மை

### மலைக்கோட்டையில் ஒரு மர்ம மாளிகை!

★ இருநூறுபேர் ஒருமாதத்துக்கு கவலையில்லாமல் குடிக்கும் அளவுக்கு தண்ணீர் எந்நேரமும் தயாராக இருக்கும். இதுதவிர நீருற்றுக்களும் அங்குண்டு.

★ வெளியிலிருந்து உள்ளேயும், உள்ளிருந்து வெளியேயும் காற்றைப் பரிமாற விசேட குழாய் அமைப்பு.

★ சீதோஷ்ணத்தை சீராக வைத்திருக்க தனிக் கம்பியூட்டர்கள். அதை இயக்க விசேட நிபுணர்கள்.

★ மின்சார பஞ்சம் அங்கில்லை - நிலைமையைச் சமாளிக்க வலு கூடிய ஜெனரேட்டர்களும் அங்குண்டு.

★ மலை மலையாக உணவை அடுக்கிய பாதுகாக்க விசேட குளிரூட்டிகள்.

★ உலகிலேயே லேட்டஸ்ட் மருந்துகள் அத்தனையும் கொண்ட ஆஸ்பத்திரி ... இவ்லாடி டாக்டர்கள் வேறு!

★ பொழுதுபோக்கிற்கு ஏகப்பட்ட ஏற்பாடுகள்!

இவையெல்லாம் எங்கே என்று கேட்கிறீர்களா? அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் இருந்து 88 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் அந்த மலைக் கோட்டையில்தான் இந்த வசதிகள் எல்லாம்!

கடந்த 38 வருடங்களாக நவீனமான ஒரு பதுங்கு மாளிகையாக இம்மலைக் கோட்டை பாதுகாக்கப்பட்டு வரும் ரகஸியம் இப்போது மெள்ள மெள்ள வெளியாகிக் கொண்டிருக்கிறது.

வாஷிங்டன் மீது அணுகுண்டு வீசப்பட்டால் அமெரிக்க ஜனாதிபதி உட்பட முக்கிய தலைவர்கள், அதிகாரிகள் போய்ப் பதுங்கிக்கொள்ள இந்த மலைக் கோட்டை எப்போதுமே தயாராக இருக்கிறது - நம்பவே முடியாத வசதிகளுடன்.

'மவுண்ட்வெதர்' என்கிற அந்த மலையில் இருக்கும் இந்த மர்ம மாளிகையைப்பற்றி டெலிபோன் டைரக்டரியில் 'விசேட பாதுகாப்பிடம்' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

'அமெரிக்கத் தலைவர்கள் பாதுகாப்பு இலாகா' என்ற சிறப்புத்துறைதான் இந்த மாளிகையை நிர்வகித்து வருகிறது. இந்த மர்ம மாளிகை பற்றி நிருபர்கள் அந்த இலாகாவின் தலைமை அதிகாரியிடம் கேட்டால் "ஓ! தாராளமாகச் சொல்கிறேன் - முழுக்கச் சொன்னபிறகு உடனே உங்களைக் கொன்று விடுவேன்!" என்று 'ஜோக்' அடித்துச் சமாளித்து விடுகிறார் அவர்.

அத்தனை ரகஸியம்!

### வடக்குத் தேவையை பூர்த்தி செய்ய இரசாயன கூட்டுத்தாபனம்

### சவர்க்கார உற்பத்தியிலும் ஈடுபடுமாம்!

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் சவர்க்கார உற்பத்தியிலும் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் இந்த உற்பத்தி வடபகுதியின் சவர்க்காரத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்குமெனவும், உற்பத்தி ஆரம்பித்ததும் வடக்கில் குறைந்த விலையில் தாராளமாக சவர்க்காரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் கொழும்பில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உத்தேச சவர்க்காரத் தொழிற்சாலை எங்கு இயங்கவுள்ளது என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

### 'சேர, சோழ மன்னர்களின் ஆட்சிக்கொடி பறந்த கடல் இது'

'கடலில் எழும் அலை போல... கடலோடு இரண்டறக் கலந்து வாழ்கின்ற நமது மக்கள், 'கடற்புலிகள்' என்ற எமது கடற்படையில் இணைந்து போராட முன்வந்தால் நாம் எதிரியிடம் இழந்துவிட்ட கடல் முழுவதையும் எமது கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டு வர முடியும்...'

இவ்வாறு அண்மையில் நாகர்கோயிலில் நடைபெற்ற கடற்புலிகளின் போர்க்காலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரதிப் பொறுப்பாளர், கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்...

'எமது கடற் பிரதேசம் முழுவதும் ஒரு காலத்திலே சேர, சோழ மன்னர்களின் கடற்படைக் கப்பல்களாலும் மரக்கலங்களாலும் நிரம்பி வழிந்திருந்தது. தமிழ் மன்னர்களின் ஆட்சிக் கொடி எமது கடலில் மட்டுமல்ல; தென் கிழக்கு ஆசிய சமுத்திரம் வரை பரவிப் பறந்து கொண்டிருந்தது. அப்போதெல்லாம் இந்தச் சிங்களப் படை ஒரு மூலையிலே அடங்கி ஒடுங்கிக் கிடந்தது என்றார்'.

### ரேஸில் ஜெயித்த... சென்னை பல்கலைக்கழகம்!

தமிழக முதல்வர் பதவியேற்ற நாளிலிருந்தே ஜெயலலிதாவுக்கு 'டாக்டர்' பட்டமளிப்பதில் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குள் பலத்த போட்டி. இந்தப் பந்தயத்தில் இறுதியாக சென்னை பல்கலைக்கழகம் 'வெற்றிவாகை' சூடி முதல்வருக்கு பட்டமளித்தது.

இதன் மூலம் கோஷ்டி மோதல்களாலும் பதவிச் சண்டைகளினாலும் உள்ளும் வெளியும் பல சிக்கல்களை எதிர்நோக்கி வந்த பல்கலைக்கழக நிருவாகம் தன்னைக் காப்பாற்றிக்கொண்டிருப்பதாக தமிழக ஏடுகள் விமர்சித்துள்ளன.

முதல்வருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கும் விழாவில் ஏகப்பட்ட 'பாதுகாப்புக்' கெடுபிடிகள்.

தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு மட்டும்தான் விழாவுக்கு அனுமதி, விழா நடக்க ஒரு வாரத்திற்கு முன்பே சென்னை பல்கலைக் கழக வளாகத்தைப் பொலிஸார் ஆக்கிரமித்துக்கொண்டனர்.

பட்டம் வாங்க வந்த பட்டதாரிகள் தங்களுடன் ஒருவரை மட்டுமே கூட்டிவர அனுமதிக்கப்பட்டனர். விழா மண்டபத்துக்கு வெளியே 'தமிழகத்தின் அன்னை தெரேஸாவே வாழ்க' என்று மிகப்பெரிய 'கட் அவுட்'கள் வேறு!

'டாக்டர்' பட்டத்தைப் பெருமையுடன் பெற்றுக் கொண்ட முதல்வர், கையெழுத்திடப் பல்கலைக் கழகத்தினர் நீட்டிய பேனாவை ('முன் எச்சரிக்கையுடன்') மறுத்துவிட்டுத் தன் உதவியாளரிடம் பேனாவைப் பெற்றுக் கையெழுத்திட்டார்.

முதல்வரின் உரை ஆங்கிலத்திலிருந்ததால் கரை வேட்டி கட்டிய பல எம். எல். ஏக்கள் எப்போது கைதட்டுவது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருந்தனர்.

### கொழும்புத் தபால்கள் நாளை கிடைக்கும்!

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் சோமாரிக் கப்பலில் வந்த 408 தபாற் பொதிகள் நேற்று பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டன.

இத் தபாற் பொதிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை தபாலகத்தில் தரம்பிரிக்கப்படவுள்ளன.

தரம் பிரிக்கப்பட்ட தபால்கள் நாளை திங்கட்கிழமை யாழ். பிரதம தபாலகப் பகுதியில் விநியோகிக்கப்படுமெனவும் ஏனைய குடாநாட்டுக்கான தபாற் பொதிகள் நாளை வழமைபோல் குடாநாட்டுத் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப் படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (06)

### சங்கீத சபைப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது!

1992-ம் ஆண்டுக்கான வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென்று யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும், வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவருமான இ சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (14)

### வலைபந்தாட்டப் போட்டி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் வலைபந்தாட்டப் போட்டிகள் கடந்த 24.01.92 அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின. (16)

### கிராமம் தோறும் செஞ்சிலுவைக் கிளைகள்!

யாழ் மாவட்டத்தில் கிராம சேவை அலுவலர் பிரிவுகள் தோறும் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

மாணவர் பிரிவு, இளைஞர் அணி போன்ற அமைப்புக்களும் செஞ்சிலுவைச் சங்கத்தினால் உருவாக்கப்பட்டு வருகின்றன.

10 - 18 வயதுள்ளவர்களைக் கொண்டதாகக் கனிஷ்டமாணவர் பிரிவு செஞ்சிலுவைச்சங்க வட்டம் அமையும். 18 - 24 வயதுள்ளவர்களைக் கொண்ட இளைஞர் அணி தொண்டர் சேவையில் ஈடுபடும். (14)

★ அமைச்சர் பதவி இழப்பு; உறுப்பினர் பதவி பறிப்பு; அடுத்து....

# லலித் தம்பதிக்கு அரசினால் வழங்கப்பட்ட இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டும் இரத்து!

அதிருப்தியாளர் குழு முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான லலித் அத்துலத் முதலிக்கும் அவரது மனைவிக்கும் வழங்கப்பட்டிருந்த இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டு அரசாங்கத்தினால இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

லலித் அத்துலத் முதலி அமைச்சர் பதவியைப் பெற்றிருந்த சமயம் அவருக்கும், அவரது மனைவிக்கும் இந்த இராஜ தந்திரிகளுக்கான கடவுச்சீட்டுக்கள் வழங்கப் பட்டிருந்தன.

லலித் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் அவருக்கு வழங்கப்பட்ட இராஜ தந்திரிகளுக்கான கடவுச் சீட்டை மீள ஒப்படைக்குமாறு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் கேட்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தார்.

தற்பொழுது லலித் தம்பதியின் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

## ஒழுக்க நெறியை வளர்க்க புதிய திட்டம் அமுலாகும்!

ஒழுக்கநெறியை வளர்க்க புதிய திட்டமொன்று விரைவில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல மாவட்டங்களையும் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்க்க பிரதேச ரீதியாக நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அவற்றை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

## வளைகுடாவில் உள்ள அமெரிக்க படையினர் தொகை அதிகரிப்பு!

வளைகுடாவில் உள்ள தனது படையினரின் தொகையை அமெரிக்கா 6 ஆயிரத்தினால் மேலும் அதிகரித்துள்ளது.

இதன் மூலம் வளைகுடாவிலுள்ள அமெரிக்கப் படையினரின் தொகை 25 ஆயிரமாக அதிகரிக்கும்.

வளைகுடா நாடுகளுக்கு பாதுகாப்பு அளித்தல், அமெரிக்க-அரபு கூட்டுப் படைப் பயிற்சி ஆகியன தொடர்பாகச்செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படியே இந்த படை அதிகரிப்பு மேற்கொள்ளப் படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## ஆண்மையைக் காக்க குறட்டையைத் தவிருங்கள்!

நீங்கள் பெரிதாகக் குறட்டை விடுபவரா?

கவனம்! குறட்டை ஆண் தன்மையை இழக்கச் செய்யும் என்கிறார் பிரிட்டனில் உள்ள நஷனல் யூதர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் கலாநிதி டேவிட் ஹட்ஜெட் என்பவர்

குறட்டை இரத்தத்திற்கு 'ஆக்ஸிஜின்' செல்வதைப் பாதியாகக் குறைப்பதனால் இருதயக் கோளாறுகளையும், களைப்பையும் உண்டாக்கும் என்று கூறுகிறார் அவர்.

வழக்கமாகப் பெரிதாகக் குறட்டை விடுபவர்கள் உயரமான தலையணையைப் பயன்படுத்த வேண்டும் என்பது இவரது யோசனை. (16)

## ஜனாதிபதி நடமாடும் செயலகம் வவுனியாவில் மேமாதம் நடைபெறும்

ஜனாதிபதியின் நடமாடும் செயலகம் மே மாதம் வவுனியாவில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னோடியாக பல்வேறு அமைச்சர்களின் நடமாடும் சேவைகள் அங்கு இடம்பெறவுள்ளன

நேற்று வவுனியாவில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் நடமாடும் சேவை இடம்பெற்றது.

## இன்று தர்க்கமல்ல உரிய தீர்வே முக்கியம்! சபையில் அமைச்சர்

அமைச்சர் தொண்டமானை விமர்சிப்பதன் மூலம் இனப்பிரச்சினையை இக்காக்க எவரும் முயலக் கூடாது என நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா இவ்வாறு கேட்டுள்ளார்.

'தொண்டமானை அகற்ற வேண்டுமென்ற தர்க்கமல்ல இன்று முக்கியம். அவர் சமர்ப்பித்ததிலும் பார்க்க சிறந்த யோசனையை சமர்ப்பித்து இப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியதே இன்று முக்கியம்' என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## துறைமுக ஏல விற்பனை இனி இடம் பெறாது!

துறைமுகங்களில் உரிமை கோரப்படாது அல்லது பறிமுதல் செய்யப்பட்டு தேங்கியிருக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் இனிமேல் ஏலத்தில் விற்பனை செய்யப் படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது

இத்தகைய பொருள்களை அகற்றுவதற்காக நடாத்தப் படும் ஏல விற்பனைகளில் மோசடிகள் இடம்பெறுவதாக செய்யப்பட்டு வரும் புகார்களையடுத்தே அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாம்.

## செய்தி உலகம்

### குவைத்தில் வட்டவடிவில்...

தபால்தலைகள் உலகெங்கிலும் பொதுவாக சதுரமாகவும், செவ்வகவடிவத்திலும் தான் வெளியிடப்படுகின்றன, ஆனால் குவைத் நாடு தபால் தலைகளை வட்டவடிவிலும் ஜமைக்கா நாடு அரை வட்ட வடிவத்திலும் தபால் தலைகளை வெளியிடுகின்றன

### அழகிகளுக்கு அமெரிக்காவில்...

அழகிகளைத் தெரிவு செய்வதற்காக உலகிலேயே அதிக செலவு செய்யும் நாடு அமெரிக்காதான் அழகி தெரிவும், போட்டியைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு மட்டும் கடந்த வருடம் 3 லட்சம் டொலர்கள் அமெரிக்கா செலவுசெய்துள்ளது, போட்டியில் வெற்றி பெறும் அழகிகளுக்கு 25 ஆயிரம் டொலர்களுக்கு மேல் பரிசளித்துள்ளது இந்த போட்டியால் நாட்டு மக்களுக்கு ஏதாவது உருப்படியான நன்மை உண்டா என்று அமெரிக்க மக்கள் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளார்கள்.

### குப்பைகளுக்கும் இப்போது...

அமெரிக்காவில் முன்பெல்லாம் வருடம் ஒன்றிற்கு 20 கோடி பாவித்த டயர்கள் குப்பையில் போடப்பட்டு வந்தன சமீபத்தில் இந்தப் பழைய டயர்களில் இருந்து ஒருவித எண்ணெய் தயாரிக்க முடியும் என்று கண்டிருக்கிறார்கள். இந்த எண்ணெயைக் கொண்டு வாகனங்களை ஓட்டலாம். எரிபொருளாகவும் பயன்படுத்தலாம் என்று கூறப்படுகிறது இக் கண்டுபிடிப்பின் விளைவாக பாவித்த டயர்களை பிறநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யவும் அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. (16)

## மாதச் சம்பளம் 562 ரூபா மட்டுமே! சுதந்திர வர்த்தக வலயத்தில்

கொழும்பில் உள்ள சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றில் பணிபுரியும் பெண்களுக்கு 5 வருடங்களாக 562 ரூபாவே மாதச்சம்பளமாக வழங்கப் பட்டது.

ஈடுபடும் இப் பெண்கள் இது குறித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் நடத்தினர்.

### புடவைத் தொழிலில் நேற்று விடுமுறை

நல்லூர் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன.

ஊழியர்களுக்கு பிரதி சனிக்கிழமைகளிலும் முழுநாள் விடுமுறை வழங்குவதென நல்லூர் வர்த்தகர் சங்கம் எடுத்த தீர்மானத்துக்கமைவே நேற்றுக் கடைகள் மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## புதிய சிறிய உழவு இயந்திரங்கள் தெற்கில் விற்பனைக்கு வருகின்றன!

கிராமிய விவசாயிகளுக்கு உதவக்கூடிய புதிய ரக இரண்டு சக்கர கை உழவு இயந்திரங்கள் விரைவில் இலங்கையில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இந்த இயந்திரங்களைச் சீனாவில் இருந்து இறக்குமதி செய்துள்ள 'லங்கா ட்ரக்டர் கம்பனி' அவற்றை 98 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனைக்கு விடவுள்ளது.

இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கியின் பண்ணை உபகரணங்கள் திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப் படவுள்ளது.

## மக்கள் மயமான நிறுவனங்களின் ஊழியர் ஓய்வுபெற ஊக்குவிப்பு

மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்கள் தாமாகவே ஓய்வு பெறுவதை அரசு ஊக்குவிக்கப் புதிய சலுகைத் திட்டங்கள் அறிவிக்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

தாமாகவே ஓய்வு பெற முன்வரும் இந்த ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப, ஊழியர் நம்பிக்கை நிதிகளுக்குரிய பணத்தை அவர்களுக்குத் தடையின்றி மீள வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்படுவதாக அறியப்படுகின்றது.

கர்நாடகத் தாக்குதல் புதிய தகவல்கள்;

# தமிழ்க் குழந்தைகளின் அவயவங்கள் கன்னட குண்டர்களால் முறுக்கி உடைக்கப்பட்டன!

கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களினால் அங்கு நூறுதமிழர்கள் வரை பலியானார்கள், தீ வைக்கப்பட்டதாலும், கொள்ளையிடப்பட்டதாலும் பெங்களூரில் மட்டும் தமிழர்களின் உடமைகளுக்கு ஏற்பட்ட சேதம் 100 கோடி ரூபாவுக்கும் மேல் என மதிப்பிடப்படுகிறது. கர்நாடகச் சம்பவம் பற்றிய பல புதிய தகவல்கள் தற்பொழுது வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

## முதலில் ராஜாஜி நகரில்

கர்நாடகம் ராஜாஜி நகரிலேயே முதலில் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அங்கு ஆயிரம் பேர் கொண்ட கும்பலொன்று முதலில் தமிழ்த் தினசரி அலுவலகமொன்றை முற்றுகையிட்டது- அலுவலகத்தில் இருந்த விலையுயர்ந்த பொருள்கள் சூறையாடப்பட்டதன் பின்னர் தீவைப்பு இடம்பெற்றது. அதே ராஜாஜி நகரில் இருந்த பெற்றோல் நிலையமொன்றும் பயங்கரமாகத் தாக்கப்பட்டது. ஆனால் நெருப்பு வைத்தால் அப்பகுதி முழுவதுமே நாசமாகிவிடும் என்பதால் அதனை முன்யோசனையுடன் தவிர்த்து விட்டார்கள் கன்னடக் குண்டர்கள்.

## அடையாளம் காட்ட விநியோகப் பையன்கள்

பல இடங்களில் தமிழர்களின் வீடுகளை அடையாளம் காட்ட அந்தந்தப் பகுதியில் பத்திரிகை மற்றும் பால் விநியோகம் செய்யும் இளைஞர்கள் குண்டர்களால் பயன்படுத்தப்பட்டனர்.

## அவயவங்கள் முறிக்கப்பட்டன

அசோகபுரம் பகுதியில் 400 தமிழர் குடிசைகள் தீயிரையாக்கப்பட்டன அங்கு குழந்தைகளின் கைகள், கால்கள் குண்டர்களால் முறுக்கி உடைக்கப்பட்டன.

## பயனற்ற ஊரடங்கு

அங்கு ஊரடங்கு போடப்பட்டதேயொழிய அது அமுல்படுத்தப்படவில்லை. ஊரடங்கு போடப்பட்டதன் பின்னர்தான் வன்முறையும், கலாட்டாக்களும் அதிகரித்தன.

## ஓட ஓட வெட்டப்பட்டனர்

கர்நாடகம் கமலா நகரில் 5000 க்கும் அதிகமான தமிழர்கள் வசிக்கிறார்கள். அதைச் சுற்றிலும் கன்னடர்கள் அதிகம். அந்த நகரிலிருந்த தமிழர்கள் ஓட, ஓட வெட்டப்பட்டார்கள்.

## உடலங்கள் சுடுகாட்டுக்கு

உயிரிழந்தவர்களின் உடலை அடையாளம் காணக் கூட யாரும் மருத்துவ மனைக்குப் போக முடியவில்லை. கொல்லப்பட்ட தமிழர்களின் உடல்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படாமல் பொலிஸாரினால் சுடுகாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

## பொலிஸே சுட்டு விடும்

'எங்களையெல்லாம் கொலை கன்னட வெறியர்கள் சபதமேற்றிருக்கிறார்கள். எங்கள் பெயர் வெளியில் தெரிந்தால் பொலிஸே எங்களைச் சுட்டுக் கொன்று விடும்...' என்று அங்கிருந்து தமிழகம் வந்து சேர்ந்த பெண்கள் தெரிவித்தனர்.

## நிர்வாணமாக் கலைத்தனர்

இவற்றையெல்லாம் விட கொடுமையான விடயம்... தமிழர்கள் வாழும் சில பகுதிகளில் வீடுகளை இழந்த பெண்கள் உடுத்தியிருந்த உடைகளையும் அவிழ்த்து இரவோடு இரவாக நிர்வாணமாகத் துரத்தப்பட்டார்கள்.

## பொலிஸாருக்கும் முக்கிய பங்கு

நடந்த கலவரத்தில் பொலிஸாருக்கும் முக்கிய பங்கு உண்டு. கலவரத்தின்போது இவர்கள் எதையும் கண்டு கொள்ளவில்லை. அன்றைய தினம் முதல்வர் பங்காரப்பா பூனாவுக்கு இசை விழாவுக்கு ஜெட் விமானத்தில் சென்றிருந்தார். அதனால் மேலிடத்திலிருந்து உத்தரவு வரவில்லை என்று பொலிஸ் சும்மா இருந்து விட்டதாகக் கூறுகிறார்கள்.

## ஒரு தமிழருக்குக் கூட பாதிப்பில்லையாம்

தப்பி வந்தவர்களின் அனுபவங்கள் இப்படித் தொடர 'கலவரத்தில் ஒரு தமிழர் கூடப் பாதிக்கப்படவில்லை' என கர்நாடக முதல்வர் பங்காரப்பா தமிழக முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

## ராஜ்குமார் வதந்தி கலவரததைத் தூண்டியது!

கலவரங்கள் கொஞ்சம் தணிந்த நேரம் பார்த்துத் திடீரெனச் சென்னையில் கன்னட நடிகர் ராஜ்குமார் வீடு தாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டு விட்டதாகப் பங்களூர் முழுவதும் வதந்தி பரப்பப்பட்டது.

இதனால் கலவரம் நடைபெறாமல் அமைதியாக இருந்த பகுதிகளிலும் கலவரங்கள் வெடித்தன. ராஜ்குமாரின் ரசிகர்கள் திடீர்த் தாக்குதலை ஆரம்பித்தனர்!

## துறைமுக ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடிவு!

துறைமுக ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கப்பற்துறை இராஜாங்க அமைச்சர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் இதுபற்றிப் பிரஸ்தாபித்தார்.

துறைமுக ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் பற்றி விரைவில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று திறப்புவிழா

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவுக்கிளைப் பகுதியிலுள்ள ஆவரங்கால் கிழக்கு, கிராமசேவையாளர் பகுதியில் இன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (06)

## இந்திய செஞ்சிலுவைச் சங்க நிருவாகம் கலைப்பு! பொறுப்புக்கள் ஜனாதிபதியிடம்

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிருவாக சபை இந்திய ஜனாதிபதியினால் கலைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்புக்களை ஜனாதிபதி ஏற்றுள்ளார்.

அடுத்த ஆறுமாத காலத்துக்குள் புதிய நிருவாக சபை தெரிவு இடம்பெறுமெனவும் அதுவரை ஜனாதிபதியினால் நியமிக்கப்படவுள்ளோர் இடைக்காலப் பொறுப்புக்களைக் கவனிப்பர் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

## பௌத்த ஆலய தலைமைப்பொறுப்பு அரசியல் வாதிகளுக்கு இனி இல்லை!

பௌத்த ஆலயங்களில் தலைமைப் பொறுப்பிற்கு இனிமேல் அரசியல் வாதிகள் போட்டியிட முடியாது.

பௌத்த ஆலயங்களின் ஒன்றியம் கேட்டதற்கு அமைவே இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளதாம்.

பாராளுமன்றத்தில் பிரதமர் இத் தகவலைத் தெரிவித்தார்.

## முகவரியைக் கவனியுங்கள்

பொதுமக்கள் தங்கள் கடிதங்கள் உரியவரிடம் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டுமெனில் சரியான பெயர், வீட்டு இலக்கம், வீதிப் பெயர்களுடன் தெளிவான முகவரியிட்டே கடிதங்களைத் தபாலில் சேர்க்க வேண்டுமென்று தபால் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (14)

## இராணுவம் தொடுக்கும் போர் மக்களுக்கு எதிரானதே! வல்வையில் பரா

சிங்கள இராணுவம்தொடுக்கும் போர் புலிகளுக்கு எதிரானது மட்டுமல்ல—தமிழர்கள் அனைவருக்கும் எதிரானதே அது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மக்கள் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பொறுப்பாளர் பரா, 1991ஆம் ஆண்டு வல்வையில் இராணுவம் மேற்கொண்ட நான்கு நாள் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஓராண்டு நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வல்வை ஆதிகோவில் முன்றலில் இக் கூட்டம் நடைபெற்றது.

மக்களை, அவர்களது உடமைகளை அழித்தால் போராட்டம் முடங்கிவிடும் என நினைத்தது அரசு—அது தவறான ஒரு முடிவு என்பதை தற்பொழுது அவர்கள் புரிந்து கொள்கிறார்கள் என பரா அங்கு மேலும் தெரிவித்தார். (09)

## திரவமாக ஹிரோயின் கொழும்பில் கண்டுபிடிப்பு

திரவநிலையிலான ஹிரோயின் என்ற போதைவஸ்து இலங்கையில் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

கொம்பனித்தெருவில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இதனைத்தயாரிக்கும் இறைன்டரும் கைப்பற்றப்பட்டது.

திரவமாக போதைவஸ்தை கடத்துவது சுலபம் என்று இந்த வர்த்தகர் இவ்வாறு செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

## கூரை பிரித்து இறங்கி தமிழரைத் தாக்கிய பொலிஸ்!

"ராத்திரியில வந்து கதவைத் தட்டிச்சு பொலிஸ். நாங்க பயந்து போய் திறக்கலை உடனே வீட்டின் மேல ஏறி ஓட்டைப் பிரிச்சுக் கீழ இறங்கிட்டாங்க. வீட்டுக்குள்ளேயிருந்த என்னையும் என் புருஷனையும் தரதரன்னு இழுத்திட்டு வந்து கண்மூடித் தனமாகத் தாக்கினாங்க என் மண்டையெல்லாம் உடைஞ்சுது! என் புருஷனையும் பலமாகத் தாக்கினாங்க வெளியே ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடப் பயந்து இரத்தம் கொட்டக் கொட்ட வீட்டிலேயே இருந்திட்டம்'.

'இந்தப் பகுதியில் வீட்டுக்குவீடு பொலிஸ் இப்படி நடந்துகிட்டது கட்சி வேறுபாடின்றி அனைவரும் சேர்ந்து தமிழக முதல்வர், தமிழக அரசு சார்பில் ஏதாவது உறுதியான முடிவு எடுத்தால்தான் கன்னடத்தில் தமிழர்கள் வாழமுடியும்'.

தமிழகத்திற்கு தப்பிவந்த பெண்மணி ஒருவர் இப்படித் தனது கதையைச் சொன்னார்.

# விபத்துக்களைத் தவிர்த்து மக்களைப் பாதுகாப்போம்

விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் எமது மக்களை கொடிய சிங்கள அரசிடமிருந்து மாத்திரமல்ல, எம்மை எமது தவறுகளிலிருந்தும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பை எமது இயக்கம் ஏற்றுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவு செயல்பட்டு வருகின்றது, என காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் வீதி விபத்துக்கள் அதிகரித்து எமது மக்கள் பல இழப்புக்களை சந்தித்து வருகின்றனர் இவ்வாறு எமது மக்கள் அநியாயமான இழப்புக்களை சந்திப்பதை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவற்றை தடுப்பதற்காக நாம் பல முறை பத்திரிகைகள் மூலமும், வானொலி மூலமும் பல அறிவித்தல்களைக் கொடுத்திருந்தோம். யாழ் நகரின் அநேகமான பாடசாலைகளுக்குச் சென்று வீதி விபத்துக்களை தவிர்த்து நடந்து கொள்வதற்கான விரிவுரைகளை வழங்கியுள்ளோம். தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம்.

இருந்தும் ஏராளமான வீதி விபத்துக்களை தினமும் எமது மக்கள் சந்தித்த வண்ணமே உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும்போது பக்கம் பக்கமாகவும், ஒருவரின் கையை இன்னொருவர் பிடித்துக்கொண்டும், கதைத்துக் கொண்டும் செல்வதால் ஏற்படும் விபத்துக்களைப் பற்றி நாம் பலமுறை கூறியிருந்தோம்.

நகரில் வாழும் பெரியோர்கள், கல்விமான்கள், பொது மக்கள் பலர் தினமும் எமது காவல்துறை அலுவலகத்திற்கு வருகை தந்து இவ்விபத்துக்களைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி சொல்லிய வண்ணம் உள்ளனர்.

இப்பெரியோர்களின்வேண்டுகோள்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதுடன் எமது மக்களின் நலனையும் கருத்திற் கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நகரின் அநேகமான முக்கிய இடங்களில் தமிழீழ காவல்துறையின் உறுப்பினர்கள் வீதி விபத்து தடுப்பு நடவடிக்கையில்ஈடுபடுத்தப்படுவர்.

இவ்வாறு எமது மக்களின் நலனை பேணிக்காப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையின் போது காவல்துறை உறுப்பினர்களுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை நல்குமாறும் அவர் அன்புடன் கேட்டுக் கொள்கின்றார்.

# பூநகரிப் பகுதி அகதிகளுக்கு பொருள் விநியோகக் குறைபாடு

பூநகரிப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் அப்பகுதியிலிருந்து பத்தாயிரம் மக்கள் இடம் பெயர்ந்து முழங்காவில், அக்கராயன், உருத்திரபுரம் போன்ற பகுதிகளில் தங்கியிருக்கின்றனர்.

இவர்களுக்கு உரியமுறையில் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளதால் தொற்று நோய்களால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 07

## ராஜீவ் கொலை தொடர்பாக

# பாதுகாப்பு அதிகாரிகள் குறுக்கு விசாரணை

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் குறுக்கு விசாரணை செய்யப்படவுள்ளனர்

இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் நீதிபதி வர்மா தலைமையிலான ஆணைக்குழு நேற்று இந்த முடிவை எடுத்துள்ளது.

ராஜீவ்காந்தியின் கொலைச் சம்பவம் தொடர்பான ஆவணங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னராக ஆணைக்குழு முன் சமர்ப்பிக்குமாறு மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் புதுடில்லி பொலிஸார் ஆகியோருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது

ஸ்ரீ பெரம்புதூரில் மே 21 ஆம் திகதி மேடை அமைத்த, மின் விளக்குகள் அமைத்த ஒப்பந்தக்காரர்கள் இம்மாதம் 27 ஆம் திகதி குறுக்கு விசாரணை செய்யப்படவுள்ளனர்.

# உதவி அரச அதிபர் பிரிவுகளில் போஷாக்குபயிற்சித்திட்டங்கள்

யாழ். மாவட்டத்தில் போஷாக்குப் பயிற்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கென பிரதேச செயலகப் பிரிவுகள் (உதவி அரசஅதிபர் பிரிவுகள்) ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு யாழ். திட்டமிடல் பணிமனை திட்டங்களை வகுத்து சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளது.

பிரதேசச் செயலக பிரிவுகள் தோறும் 1992 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் போஷாக்குப் பயிற்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு 10,000ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது

இதற்கான நடவடிக்கைகளை யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் யாழ் அரச அதிபரின் அனுசரணையுடன் மேற்கொண்டுள்ளார்.

யாழ் மாவட்ட மக்களின் போஷாக்கு நிலைமைகளில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சிகளும் அவதானிப்புகளும் எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றன.

போஷாக்கான உணவு முக்கியமென்பதோடு உணவை உட்கொள்பவர்களின் பொருளாதார அறிவியல் சூழல் நிலைமைகளும் கவனிக்கப்படவேண்டிய முக்கியவிடயங்களாகும்.

மனிதவள அபிவிருத்திக்காக முதலீடு செய்தலும் பாரிய பொறுப்பாகும் எனவும் அச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# வீதி விபத்துக்களால் 25நாள்களில் 50 பேர் காயம்

நாவற்குழி கண்டி வீதியில் இடம் பெற்ற சைக்கிள், மக்வாகன விபத்தில் நேற்று முன்தினம் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

சரசாலையிலிருந்து சைக்கிளில் வந்து கொண்டிருந்த செல்வி ராகினி இரத்தினம் (21, இரத்தினம் சுரேஸ் (17) ஆகியோரே படுகாயங்களுக்குள்ளாகியவர்களாவர்.

நேற்று முன்தினமும் இதே வீதியில் லொறி சைக்கிள் விபத்தில் நாவற்குழியைச் சேர்ந்த சகாயநாதன் றொபி சதீஸன் (14) சிறுவன் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 25 நாள்களில் யாழ் குடாவில் தினமும் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகிறதாகவும் ஐம்பதுக்கு மேற்பட்டோர் யாழ் பொது மருத்துவமனையில அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்துள்ளதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் மாதத்தில் ஏற்பட்ட வாகன விபத்துக்களில ஐவர் உயிரிழந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது 07

# பூநகரியில் பெரும்போக அறுவடை செய்யமுடியாத நிலை

பூநகரியில் பெரும் போக நெற்செய்கை இம்முறை பாதிக்கப்பட்டுள்ளது

கடந்த வருடபிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் பத்தாயிரம் ஏக்கர் நெற்செய்கையை அறுவடை செய்ய முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

செட்டியா குறிச்சி, ஆலடி, ஏணிமடம், கறுக்காய்த் தீவு, மரமங்காய் போன்ற பகுதிகளில் படையினர் நிலை கொண்டுள்ளனர். இதனால் விவசாயிகள் அறுவடையை மேற்கொள்ள முடியாதுள்ளனர் 07

# கழிவுப் பொருள் தாங்கள்

பாஷையூர் வாய்க்கால் பகுதிகளுக்குள் அப்பகுதி மக்கள் கழிவுப் பொருள்களை போடுவதை தடுக்குமுகமாக யாழ் மாநகரசபை சுகாதாரப்பகுதியினர் 24 வெற்றுத் தாங்களை அப்பகுதிகளில் கழிவுப் பொருட்களை போடுவதற்கு வைத்துள்ளனர். (07)

# சைக்கிள் இலக்கத் தகடுகள்

யாழ் மாநகரசபையினர் சைக்கிள்களுக்கு இவ்வருடத்திற்கான புதிய இலக்கத் தகடுகளைவிநியோகம் செய்து வருகின்றனர்.

விடுமுறை நாளைத் தவிர ஏனைய நாள்களில இலக்கத் தகட்டினைப் பெற்றுக் கொள்ளலாம் என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. 07

# பூநகரி கடற் பகுதியில் மீனவர் மீது படையினர் சூடு

பூநகரி - யாழ் ஊடான கடற் பகுதியில் பூவரசந்தீவு - கல்முனை பிராந்தியத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணக் கரையோரப் பகுதி மீனவர்களை நோக்கி கடலில் ரோந்து சென்று கொண்டிருந்த படையினர் 50 கலிபர்த்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களை யடுத்து மீனவர்கள் தமது படகுடன் தப்பி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சேதவிவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த இருமாத காலமாக யாழ்ப்பாணப் பகுதி கரையோர மீனவர்கள் கடற் பிராந்தியத்தில் மீன் பிடிக்கச் செல்லும் போது இராணுவத்தினராலும், கடற்படையினராலும் கடும் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

இதுவரையில் 20 பேர்வரையில் கைது செய்யப்பட்டும் ஐந்து பேர்வரையில் காயப்பட்டும் உள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். 07

# நூல் வெளியீட்டு விழா

''நேருக்குநேர்'' நூலவெளியீட்டு விழா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நாளை 27 ஆம் திகதி திங்கள் அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நூலை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி 6 ஆம் ஆண்டு மாணவிகள் ஆக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 11

# சதிப் புரட்சி விசாரணை

கொர்ப்பச்சேவை சதிப் புரட்சி மூலம் அகற்ற முற்பட்ட பதினொரு பேருக்கெதிராக விசாரணை நடக்க விருப்பதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

புலனாய்வுத் துறையினர் 125 தொகுதிகள் அடங்கிய வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாகவும், எதிரிகளுக்கெதிரான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படின் எதிரிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கண் சிகிச்சைக்கு 15 துண்டு

யாழ் பொது மருத்துவமனையில் உள்ள கண் சிகிச்சைப் பிரிவுக்கு வரும் கண் நோயாளர்களுக்கு 15 தொடக்கம் 20 வரையிலான இலக்கத் துண்டுகளே வழங்கப்பட்டு வருகிறது.

ஐம்பதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் அதிகாலை நான்கு மணியிலிருந்து வெளி நோயாளர் பகுதிக்கு தினமும் வருகின்றனர்.

துண்டு கிடைக்காமல் மிகுதிப் பேர் திரும்பிச் செலும் நிலையேற்பட்டுவருகிறது (07)

# அதிபர்கள் கூட்டம்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அதிபர்கள் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையில் நடைபெறும். இக்கூட்டத்தில் தொண்டர் ஆசிரியர்கள் பற்றியும், கோத்தணி கல்வி அபிவிருத்திக்குழு மூலமாக தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் பற்றியும் அறிவுறுத்தல் வழங்கப்படும், அதிபர்கள் தவறாது சமுகமளிக்கும்படி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா கேட்டுள்ளார்.

## கட்டாக்காலி நாய்கள் நேற்று பிடிக்கப்பட்டன

நேற்று யாழ் மாநகரப்பகுதியில கட்டாக்காலி நாய்கள் யாழ் மாநகரப் பகுதியினரால் பிடிக்கப்பட்டன.

திருநெல்வேலி, சந்தர்மடம் மற்றும் பல பகுதிகளிலும் பல நாய்கள் பிடிக்கப்பட்டன.

இதனால் யாழ் மாநகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின்தொலலைகள் குறைந்து வருகிறது.

இதேவேளை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் ஒரு நாயை கொலபவருக்கு 25 ரூபா என்று அறிவித்தும் இதுவரை எவரும் முன்வரவிலலை என்று செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன 06,07

## கால்நடை வளர்ப்போருக்கு அரிய சந்தர்ப்பம்

பருத்தித்துறைப் பகுதியில் கால்நடைகளுக்கான சிகிச்சைகள் ஆலோசனைகள் என்பன அடுத்த மாதம் 6ஆம் திகதி இரு நிலையங்களில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இன விருத்தி உதவிப்பணிப்பாளர் ஆர், எஸ் நவரத்ணம் சிகிச்சைகள் ஆலோசனைகளை வழங்குவார்,

6ஆம் திகதி காலை 8மணி தொடக்கம் 11 30மணிவரையும் புலோலியிலுள்ள பருத்தித்துறை கால்நடை வைத்தியர் அலுவலகத்திலும் பி ப 1. 30 மணிதொடக்கம் 3, 30 மணிவரை தமிழீழ ஆய்வு நிறுவன வடமராட்சி பிரிவுச் செயலகத்திலும் இச்சிகிச்சைகள் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன, (11)

## பொலியஸ்டர் துணி விநியோகம்

பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெள்ளைப் பொலியஸ்டர் துணியை பாவனையாளருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. 07

### சிறுநீரகம்...

டில் இயங்குவதாகவும் சில வைத்திய அதிகாரிகளே தரகர்களாகச் செயற்பட்டு இவ் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் அவர்களது விசாரணையில் தெரியவந்துள்ளது.

வைத்தியசாலையில் உள்ள நோயாளிகளிடம் பேரம்பேசி இவ் விற்பனை நடைபெறுவதாகவும், முக்கியமாக சிறுநீரகச் சந்தையில் பலர் தொடர்புகொண்டுள்ளதாகவும் விசாரணை அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

இந்தச் சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபடும் வைத்திய அதிகாரி மாதம் 100,000 ரூபாவை சம்பாதிக்கின்றார் என அறிக்கை தெரிவிக்கிறது.

### ஒற்றுமை...

பா. ஐ. கட்சியின் ஒற்றுமை யாத்திரைத் தொண்டர்கள் 8 பேருந்துகளில் தகுந்த பாதுகாப்புடன் எல்லைப் பகுதிக்குச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கிருந்து தலைவர்கள் விமானத்தில அழைத்துச் செல்வர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீநகரில் பொலிஸ் தலைமையகம் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ஊரடங்குச்சட்டம் இன்னும் அமுலில் இருக்கிறது ஒற்றுமை யாத்திரிகர்கள் மீது பஞ்சாப் தீவிரவாதிகள் தாக்கியதில நாலவர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

## காணிப்பதிவக ஊழியருக்கு 3மாதச் சம்பளம் இல்லை

பருத்தித்துறை காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு கொழும்பிலிருந்து காகிதாதிகள் அனுப்பப்படாததால் உறுதிகள் பிறப்புச் சான்றிதழ்கள் பெறுவதில் கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வலுவலக ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாத சம்பளமும் வந்து சேரவில்லையெனவும் தெரியவருகிறது (08)

## 72 பேருக்கு ஏ. எஸ். பி. பதவி

72 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து உதவிப் பொலிஸ் (அத்தியட்சகர்களாக) ஏ. எஸ். பி. பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களில் ஜி. என். நடராஜா, வி. ரி. சுந்தரலிங்கம், கே. பொன்னம்பலம், எம். எஸ். ஜெயானந், கே ஸ்ரீதரன், எஸ். குணேஸ்வரன், பி. எம். ஹமீட், எம். எஸ். நிசாத். எம். ஆர். லதீப், எம். எச். அன்வர், கே. அரசரட்ணம் ஆகியோரே சிறுபான்மையினராவர். 17

### செட்டியா...

னரால் சேதப்படுத்தப்பட்டுள்ளது கோயிலில படையினர் சென்றி போட்டுள்ளனர்.

செட்டியாகுறிச்சி, கறுக்காதீவு ஆகிய இடங்களில பல கலவீடுகள் இராணுவத்தினரால நீர் மூலமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நீரில...

போது குழந்தையைக் காணாமையால் அவ் விடத்துக்கு ஓடிவந்த போது குழந்தை நீரில் மூழ்கி மரணமடைந்திருக்கக் கண்டார். 25

### கோப்பாய்...

தினார்.

செயலாளர் எஸ். சிவானந்தராசா தமது உரையில் மின்சார ஒளி போல கோப்பாய்ப் பகுதி மாணவர்கள் கல்வியில் ஒளி பெறவேண்டும் என்றார். 06

# கிளிநொச்சி ஆசிரியருக்கு கஷ்டப்படி வழங்கப்படும்

கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேசப்படி வழங்க வடஇழக்கு மாகாண கல்வி அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள 85 பாடசாலைகளில் 28பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு கஷ்டம் பிரதேசப்படியும் 47 பாடசாலை ஆசிரியர்களுக்கும் மிகக் கஷ்டப் பிரதேசப் படியும் வழங்கப்படவுள்ளது,

மிகுதிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்குவது பற்றி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகரில் உள்ள பாடசாலைகள் தவிர, பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கே இப்படி கிடைக்கவுள்ளது. 17

## இண்ணியாவில் தமிழர் மறைவு

கிண்ணியாவில் வாழும் தமிழ் அகதிகள் சிலர் மர்மமாக மறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளுக்கு செல்லும் சமூக சேவை நிறுவனத்தினர் படையினரால் தடுக்கப்பட்டதாகவும்,தெரிவிக்கப்படுகிறது,

## யாழ். பல நோ. கூ. சங்கத்தின் மலிவு விற்பனையில் வானவில் விற்பனையகம்

யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவு சங்கம் வானவில் விற்பனையகம் என்ற பெயரில் புதிய கிளை ஒன்றை திறந்து வைத்துள்ளது.

இங்கு சீனி, அரிசி, பாலுணவு மற்றும் உணவுப் பொருள்கள் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இப் பொருள்களை மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாங்குவதை அவதானிக்க முடிந்தது 08

## இலங்கைக்கு குவைத் தொழிலதிபர்கள்

இலங்கையில முதலீடு செய்வதற்கு குவைத் நாட்டு தொழில அதிபர்களின் ஆதரவை இலங்கை அரசு நாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரதமர் விஜயதுங்க நேற்று குவைத்துக்குப் பயணமானார்

கடந்த வருடம் குவைத்தை ஈராக்முற்றுகையிட்டபோது அங்கு தொழில் செய்து வந்த 80 ஆயிரம் இலங்கையர் பாதிக்கப்பட்டனர். என்பதும் தற்போது அங்கு தொழில் வாய்ப்பும் பெற்றுச் சென்றவர்களில் அதிகமானோர் பெண்கள் என்பதும் தெரிந்தவையே.

## நெடுந்தீவில் பணமின்றி சைக்கிளை விற்றார்

கடந்த செப்டம்பர் மாதம் நெடுந்தீவுக்கு தமது சைக்கிளையும் கொண்டு அங்கு மரக்கறி வியாபாரம் செய்யச்சென்ற சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ். குட்டித்தம்பியும் நேற்றுமுன்தினம் நெடுந்தீவில் இருந்து குமணகப்பலில் வந்துசேர்ந்துள்ளார்.

இவர் தமக்கு செலவுக்கு பணம் எதுவும் இலலாமல் தமது சைக்கிளை விற்று உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ததாகவும் வரும்போது வெறுங்கையுடன் வந்துசேர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார். (06)

## புத்தளத்தில் பிரேமதாஸ இனப்பிரச்சினை தீர ஒத்துழைப்புத் தேவை

இனப்பிரச்சினையைத் தீர்க்க சகல கட்சிகளும் அரசுக்கு ஒத்துழைக்கவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ புத்தளத்தில் கூறினார்,

சர்வகட்சி மாநாடு பாராளுமன்றத் தெரிவிக்குழுவில் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சொன்னார்.

## குருநாகலில் புதிய நிலையம்

இலங்கையின் புதிய மறைமாவட்டமான குருநாகலில் புதிய மேய்ப்புப்பணி நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. குருநாகல் ஆயர் அதிவந்.றேமண்ட் பீரிஸ் ஆண்டகை இத் திறப்பு விழாவில் பேசுகையில் நீதியும் சமாதானமும் வளரக் கத்தோலிக்க மக்கள் முன்வந்து உழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். (14)

## பரிசளிப்பு விழா

1990 ஆம் ஆண்டிற்கான சைவ பரிபாலனசபை பரீட்சைப் போட்டி பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 22

## தென்னாபிரிக்காவில் ஆர்ப்பாட்டம் இனப்பாகுபாடற்ற ஜனநாயகம் தேவை

வெள்ளையரல்லாதாருடன் இணைந்து அதிகாரத்தில் பங்கு கொள்வதற்கு வெள்ளையர்கள் முன்வர வேண்டும் என தென்னாபிரிக்க ஜனாதிபதி எப், டபிள்யூ. டி கிளார்க் தெரிவித்துள்ளார்,

கேப்டவுனில் அமைந்துள்ள பாராளுமன்றக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது இன ஒதுக்கலற்ற ஜனநாயகமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்று. குறிப்பிட்டார்.

ஜனாதிபதி இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போது ஆயிரக்கணக்கான மக்கள் பாராளுமன்றக் கட்டிடத்தை நோக்கி நிறவெறி அற்ற அரசாங்கமொன்றை உடனடியாக நிறுவுமாறு கோஷமிட்டு ஆர்ப்பரித்தனர்,

கவசவாகனங்களுடன் ஆயுதமேந்திய பொலிஸார் பாராளுமன்றக் கட்டிடத்தை சூழ்ந்து காவல் புரிகின்றனரென ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

தென்னாபிரிக்காவில் ஏற்படுத்தப்படவிருக்கும் அரசாங்க முறையை பற்றி மக்களிடையே கருத்துக் கணிப்புச் செய்ய விரும்புவதாக பத்திரிய செய்திகள் தெரிவித்தன.

## இறுதியாட்டம்

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படும் அமரர் வீ. கே. ஆறுமுகம் நினைவுக் கிண்ணச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை 27ஆம்திகதி பிற்பகல் அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் 11

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 26-01-1992 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.